அவர்களின் எண்ணத்தைக் கவனத்தில் கொண்டு பரிசீலனை செய்து தேவையானதைச் செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தூத்துக்குடி துறைமுகம்

*வினா எண். 240—திரு. து. புருஷோத்தமன் : திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கின்ற செ(ா)ரணம் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :—

தூத்துக்குடி துறைமுகத்தை விரிவு படுத்துவதுபற்றி மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :— இல்லை.

திரு. து. புருஷோத்தமன் : தலைவரவர்களே, இந்தத் துறைமுகத்தை விரிவுபடுத்தினால் தூத்துக்குடி ஒரு தலைசிறந்த தொழில் நகரமாக வருவதற்குரிய வாய்ப்பு ஏற்படும். ஆகவே மத்திய அரசை மாநில அரசு இத்துறைமுகத்தை விரிவுபடுத்து வது குறித்து வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன். தூத்துக்குடி துறைமுகத்தில் தற்போது ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்படுகின்ற சரக்கு எவ்வளவு என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, எவ்வளவு சரக்குகள் ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்படுகின்றன என்ற தகவல் இல்லை. ஆனால் துறைமுகத்தை விரிவுபடுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் தூத்துக்குடி துறைமுக வளர்ச்சி வாரியம் என்று ஒரு புதிய வாரியமே அமைக்கப்பட்டிருக் கின்றது. அதிலே மாநில அரசு அதிகாரிகளும், மத்திய அரசு அதிகாரிகளும் உறுப்பினர்களாக இடம் பெற்றிருக்கிறார்கள். அவர்களுடைய கூட்டம் பல முறை நடந்திருக்கின்றது. மீண்டும் அந்தக் கூட்டத்தை நடத்த இருக்கிறார்கள். அக்கூட்டம் முடிந்த பிறகு அது குறித்த தகவலை மத்திய அரசுக்கு அனுப்பி இதிலே திட்டவட்டமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாநில அரசின் மூலம் சொல்வதாக இருக்கிறோம் என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

[1981 பிப்ரவரி 7

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி நகரம் வளர்ந்து வருகிற ஒரு பெரிய நகரம். அது மாத்திரம் அல்லாமல் அது இண்டஸ்டிரியல் ஏரியாவாகவும் மாறிக் கொண்டிருக்கிறது. அந்த வகையிலும் வளர்ந்து வருகிறது. ஸ்பிக் நிறுவனம்கூட அங்கே வந்திருக்கிறது. அதனால் அத்துறைமுகத்தை விரிவுபடுத்த அப்பகுதி மக்களும் விரும்புகிறார்கள். அதிகாரிகளும் விரும்புகிறார்கள். ஆகையினால் அடிக்கடி கூட்டம் மட்டும் போட்டு போட்டு நேரத்தைக் கடத்திக் கொண்டு போகாமல் உடனடியாக அபிவிருத்தி செய்வதற்கான முடிவை மேற்கொள்ள அரசு முன் வருமா என்று கேட்க விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி துறைமுகத்தை விரிவுபடுத்த வேண்டும் என்று எப்படி மக்கள் விரும்புகிறார்களோ எப்படி அதிகாரிகள் விரும்புகிறார்களோ, அப்படித்தான் நாங்களும் விரும்புகிறோம். ஆகையினால் நிச்சயமாக அதற்கான ஆய்வுகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும். அதற்காகத்தான் வாரியம் ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய கருத்துக்களைக் கேட்டிருக்கிறோம். அந்தக் கருத்துக்களைப் பெற்று மத்திய அரசாங்கத்திற்கு தெரிவிப்போம். விரிவுபடுத்தியே ஆக வேண்டும் என்று மத்திய அரசாங்கத்தை வற புறுத்துவோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி துறைமுகத்தை விரிவுபடுத்த வேண்டும் என்று சொல்லிய பிறகு 2 ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்ட பிறகும் அமுலுக்கு வரவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ? ஆகவே இந்த மாமன்றத்தின் மூலமாக, தூத்துக்குடி துறைமுகத்தை விரிவுபடுத்தும் திட்டத்தை கொண்டு வர வேண்டும் என்கிற தீர்மானத்தைப் போட்டு, மத்திய அரசுக்கு அனுப்பி உடனடியாக அத்திட்டத்தை நிறைவேற்றும் வகையில் தீர்மானம் கொண்டு வர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு. திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போடப்பெற்ற 2 ஐந்தாண்டு திட்டங்களுக்கும் தூத்துக்குடி துறைமுகத்திட்டம் மாத்திரம் அல்ல. பல்வேறு நிறைய திட்டங்கள் கொடுக்கப் பெற்றிருக்கின்றன. பலவற்றை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சிலதை தள்ளியிருக்கிறார்கள். ஆகவே, அப்படி மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோல் பிரச்னை வருகிற காலத்தில் இந்தத் திட்டத்தை ஏற்று நடத்த வேண்டும் என்று இந்த அரசாங்கம் நிச்சயமாக வற்புறுத்தும்.